# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மானியக் கோரிக்கை எண். 44

அறிவிப்புகள்

2021 - 2022


**தா.மோ. அன்பரசன்**

ஊரகத் தொழில் துறை அமைச்சர்

# குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் சார்பில் 18 புதிய அறிவிப்புகளை வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

**தா.மோ. அன்பரசன்**

**ஊரகத் தொழில் துறை அமைச்சர்**

1. **தமிழ்நாடு சிட்கோ மூலம், தமிழ்நாட்டின் அனைத்து பகுதிகளிலும் சீரான தொழில் வளர்ச்சி ஏற்படுத்திட, திருச்சிராப்பள்ளி மாவட்டம் - மணப்பாறை, திருவள்ளூர் மாவட்டம் - காவேரிராஜபுரம், செங்கல்பட்டு மாவட்டம் - கொடூர் மற்றும் மதுரை மாவட்டம் - சக்கிமங்கலம் ஆகிய நான்கு இடங்களில் மொத்தம் 394 ஏக்கர் பரப்பளவில், ரூ.218.22 கோடி மொத்த திட்ட மதிப்பில் 4 புதிய தொழிற்பேட்டைகள் அமைக்கப்படும். இதன் மூலம் மொத்தம் சுமார் 7,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணப்பாறையில் சிப்காட்டிடமிருந்து, 120 ஏக்கர் நிலம் பெறப்பட்டு ரூ.85 கோடி திட்ட மதிப்பில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்காக புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 2,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி வட்டம், காவேரிராஜபுரம் கிராமத்தில் ரூ.65 கோடி திட்ட மதிப்பில் 144 ஏக்கரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன்

மூலம் சுமார் 2,500 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

செங்கல்பட்டு மாவட்டம், செய்யூர் வட்டம், கொடூர் கிராமத்தில் 98 ஏக்கரில் ரூ.45.94 கோடி திட்ட மதிப்பில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 1,500 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

மதுரை மாவட்டம், மதுரை கிழக்கு வட்டம், சக்கிமங்கலம் கிராமத்தில் ரூ.22.28 கோடி திட்ட மதிப்பில் 32 ஏக்கரில் புதிய தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம், சுமார் 1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

2. புதிய தொழில்முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம்பாட்டுத் திட்டத்தின் (NEEDS) கீழ், பயன் பெற தேவையான கல்வித்தகுதியை பன்னிரெண்டாம் வகுப்பு என தளர்த்தியும், தனி நபர் முதலீட்டு மானியத்தை ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக உயர்த்தியும் வழங்கப்படும். மேலும் இத்திட்டத்தின் கீழ், பட்டியல் இனம் / பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளி தொழில்முனைவோருக்கு 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்

நீட்ஸ் திட்டத்தின் அதிகபட்ச முதலீடு ரூ.500 இலட்சம் ஆகும். மாநில அரசு திட்டத் தொகையில் 25 விழுக்காடு முதலீட்டு மானியம் அதிகபட்சமாக ரூ.50 இலட்சம் வரை வழங்குகிறது. தேவையான கல்வித்தகுதி பட்டம் / பட்டயம் / ஐடிஐ / அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் தொழிற்பயிற்சிச் சான்றிதழ் என நிர்ணயிக்கப்பட்டுள்ளது. கல்வித் தகுதியை தளர்வு செய்து பன்னிரெண்டாம் வகுப்புத் தேர்ச்சியும் கல்வித் தகுதியாக சேர்க்கப்படும். இத்திட்டத்தின் கீழ் வழங்கப்படும் முதலீட்டு மானிய உச்ச வரம்பு ரூ.50 இலட்சத்திலிருந்து ரூ.75 இலட்சமாக

உயர்த்தப்படும். மேலும் பட்டியல் இனத்தோர்/ பழங்குடியினர் மற்றும் மாற்றுத் திறனாளி தொழில் முனைவோர்களை ஊக்குவிக்கும் முகமாக இத்திட்டத்தின் கீழ், அப்பிரிவு தொழில்முனைவோர்களுக்கு பொதுவான 25 விழுக்காடு தனிநபர் முதலீட்டு மானியத்துடன் 10 விழுக்காடு கூடுதல் முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

**3. நீலகிரி மாவட்டத்தில் உள்ள 10 கூட்டுறவு தேயிலைத் தொழிற்சாலைகள், நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் (RIDF) கடன் உதவியுடன், ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் நவீனமயமாக்கப்படும்**

தமிழ்நாடு அரசு உதவி மற்றும் நபார்டு வங்கியின் ஊரக உட்கட்டமைப்பு மேம்பாட்டு நிதி திட்டத்தின் (RIDF) கடன் உதவியுடன் நீலகிரி மாவட்டத்தில் உள்ள கரும்பாலம் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, மேற்குநாடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, மகாலிங்கா தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, இத்தலார் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, கட்டபெட்டு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிராண்டியர் தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, கின்னக்கோரை தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிக்கட்டி தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, எபநாடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை, பிதர்காடு தேயிலை கூட்டுறவுத் தொழிற்சாலை ஆகிய 10 தேயிலைத் தொழிற்சாலைகளில், சிதிலமடைந்த மற்றும் பயனற்று இருக்கும்

தேயிலை உற்பத்தி இயந்திரங்கள், உபகரணங்கள் மாற்றப்பட்டு ரூ.50.06 கோடி மதிப்பீட்டில் சீரமைக்கப்படும். இதனால் தரமான தேயிலைத்தூளை தயாரிக்க இயலும். இதன்மூலம் தொழிற்கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளின் வருமானம் பெருகி அவற்றின் 25,000 உறுப்பினர்கள் / சிறு தேயிலை விவசாயிகளின் வாழ்வாதாரம் செழிப்படையும்.

**4. தமிழ்நாடு சிட்கோ மூலம் செங்கல்பட்டு மாவட்டம், கடம்பாடியில் 19 ஏக்கரில் ரூ.23 கோடி திட்ட மதிப்பில், சிற்பக் கலைஞர்களின் மேம்பாட்டிற்காக சிற்பக் கலைஞர் தொழிற்பூங்கா (Park for Sculptors) சுமார் 100 சிற்பக் கலைஞர்கள் மற்றும் இதர 1,000 நபர்கள் பயன் பெறும் வகையில் அமைக்கப்படும்**

புராதன சிறப்பும், சுற்றுலா சிறப்பும், சிற்பப் பாரம்பரியமும் நிறைந்த மாமல்லபுரம் பகுதியில் சூழல் தூய்மை, சிற்பக்கலைஞர்களின் உடல் நலன், திறன் மேம்பாடு மற்றும் சந்தைப்படுத்தும் வாய்ப்பு ஆகியவற்றை மேம்படுத்தும் நோக்கில் செங்கல்பட்டு மாவட்டம், திருக்கழுக்குன்றம் வட்டம், கடம்பாடி கிராமத்தில் 19 ஏக்கரில் காற்று மாசற்ற, உகந்த சூழலுடனும் மற்றும் தரமான உட்கட்டமைப்பு வசதிகளுடனும் ரூ.23 கோடி திட்ட மதிப்பில் சிற்பக் கலைஞர்களுக்கான தொழிற்பூங்கா அமைக்கப்படும். இந்த சிற்பக் கலைஞர் தொழிற்பூங்காவை (Park for Sculptors) உருவாக்குவதன் மூலம், மாமல்லபுரத்தை சுற்றியுள்ள சுமார் 100 சிற்பக்கலைஞர்கள் பயன்பெறுவர். மேலும், இதன் மூலம் கூடுதலாக சுமார் 1,000 நபர்களும் சிற்பக்கலை சார்ந்த இதர வேலைவாய்ப்புகளை பெறுவர்.

**5. கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் நேரடியாக 10,000 வேலைவாய்ப்புகளை உருவாக்கிட ஏதுவாக, சங்க உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன், ரூ.17.57 கோடி திட்ட மதிப்பீட்டில் 585 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் பயன்பாட்டிற்காக அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும்**

கோயம்புத்தூர் மாவட்டம், கிட்டாம்பாளையம் கிராமத்தில் அமைந்துள்ள அறிஞர் அண்ணா கூட்டுறவு தொழிற்பேட்டையில் உறுப்பினர்களின் நிதி பங்களிப்புடன் சாலை அமைத்தல், தண்ணீர் வசதி, கழிவு நீர் வெளியேற்ற வசதி மற்றும் தெரு விளக்கு வசதி போன்ற அடிப்படை கட்டமைப்பு வசதிகள் உருவாக்கப்படும். இதன் மூலம், 585 குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் புதிதாக துவங்கப்பட்டு 10,000 நபர்களுக்கு வேலைவாய்ப்பு உருவாக்கப்படும்.

**6. கொசிமா (COSIEMA) மூலம் கோயம்புத்தூர் மாவட்டம், சொலவம்பாளையம் கிராமத்தில் 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில், ரூ.9.06 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இதன் மூலம் சுமார் 1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்**

கோயம்புத்தூர் மாவட்டம், கிணத்துக்கடவு வட்டம், சொலவம்பாளையம் கிராமத்தில், 42.42 ஏக்கரில் ரூ.18.13 கோடி திட்ட மதிப்பில் கொசிமா (COSIEMA - Coimbatore SIDCO Industrial Estate Manufacturers Association) மூலம் புதிய தனியார் தொழிற்பேட்டை அமைக்கப்படும். இத்தொழிற்பேட்டையில் தமிழ்நாடு அரசின் ரூ.9.06 கோடி மானியத்துடன் உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்படும். இத்தொழிற்பேட்டையை உருவாக்குவதன் மூலம் சுமார் 1,000 நபர்கள் வேலைவாய்ப்பினைப் பெறுவர்.

7. **பொது உற்பத்தி கட்டமைப்பு திட்டத்தின் கீழ், கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூர், மதுக்கரை மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தம் ஆகிய மூன்று இடங்களில் அமையப்பெறும் குழுமங்களுக்காக மொத்தம் ரூ.12.81 கோடி திட்ட மதிப்பில் ரூ.7.50 கோடி தமிழ்நாடு அரசு மானியத்துடன் பொது உற்பத்தி உட்கட்டமைப்புகள் ஏற்படுத்தப்படும். இதன்மூலம், சுமார் 150 குறுந் தொழில்முனைவோர் பயன்பெறுவர்**

தமிழ்நாடு சிட்கோ மூலம் பொது உற்பத்தி உட்கட்டமைப்பு (CPI) திட்டத்தின் கீழ், தமிழ்நாடு அரசு மானிய உதவியுடன் கோயம்புத்தூர் மாவட்டம், வெள்ளலூரில் ரூ.4.76 கோடி மதிப்பில் வார்ப்பு குழுமம், மதுக்கரையில் ரூ. 4.44 கோடி மதிப்பில் பொறியியல் குழுமம் மற்றும் வேலூர் மாவட்டம், குடியாத்தத்தில் ரூ. 3.61 கோடி மதிப்பில் தீப்பெட்டிக்குழுமம் ஆகிய மூன்று குழுமங்கள் அமைக்கப்படும். இவற்றிற்கு பொது உற்பத்தி உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்த தமிழ்நாடு அரசு மானியமாக ரூ.7.50 கோடி வழங்கப்படும். இதன் மூலம் சுமார் 150 குறுந்தொழில்முனைவோர் பயனடைவர்.

**8. குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் தங்களின் தரத்தை மேம்படுத்திட, அவை கொள்முதல் செய்யும் உயர் விலை கொண்ட அளவீடு மற்றும் சோதனை கருவிகளில் செய்யப்படும் முதலீடு, மானியம் கணக்கிட தகுதியானதாகச் சேர்க்கப்பட்டு, முதலீட்டு மானியம் வழங்கப்படும்**

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் தங்கள் செயல்முறை மற்றும் உற்பத்தி பொருட்களின் தரத்தினை மேம்படுத்த வேண்டிய அவசியம் இருந்தாலும், அளவீடு மற்றும் சோதனை கருவிகள் பல இலட்ச ரூபாய் செலவாகும் என்பதால் இத்தகைய விலையுயர்ந்த அளவீடு மற்றும் சோதனை கருவிகளை கொள்முதல் செய்ய முடிவதில்லை.

எனவே, குறு, சிறு மற்றும் நடுத்தர உற்பத்தி தொழில் நிறுவனங்கள் தங்கள் தரத்தை மேம்படுத்த அளவீடு மற்றும் சோதனை கருவிகள் / உபகரணங்களில் செய்யப்படும் முதலீடு, மானியம் கணக்கிட தகுதியானதாகச் சேர்க்கப்பட்டு முதலீட்டு மானியம் வழங்கப்படும்.

9. **மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரிய குறு மற்றும் சிறு தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளிக் கொலுசு, வெள்ளி விளக்கு தயாரித்தல், பித்தளைப் பொருட்கள் மற்றும் பாத்திரப் பொருட்கள் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டு சார்ந்த தொழில்கள் ஆகியவை சிறப்பு தொழில் வகையின் (Thrust Sector) கீழ் கொண்டு வரப்பட்டு, சிறப்பு முதலீட்டு மானியம் வழங்கப்படும்**

மாநிலத்தில் நலிவுற்று வரும் பாரம்பரியத் தொழில்களான உப்பு உற்பத்தி, வெள்ளி கொலுசு மற்றும் வெள்ளி விளக்கு தயாரித்தல், பித்தளைப் பொருட்கள் மற்றும் பாத்திரப் பொருட்களின் உற்பத்தி, பூட்டு உற்பத்தி மற்றும் பட்டு சார்ந்த தொழில்கள், ஆகியவை பாரம்பரியத் தொழில்கள் (Traditional Sector) என வகைப்படுத்தப்பட்டு, சிறப்பு தொழில் வகையின் (Thrust Sector) கீழ் கொண்டு வரப்பட்டு அவற்றிற்கு சிறப்பு முதலீட்டு மானியம் அளிக்கப்படும். இதன் மூலம், பின்தங்கிய வட்டாரங்கள் அல்லாத பகுதிகளில் அமைக்கப்படும் இப்பிரிவின் கீழ் வரும் சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் முதலீட்டு மானியம் பெறலாம்.

**10. சேகோசர்வ் நிறுவனத்தின் நான்கு கிடங்குகளில் பணிகளை எளிதாகக் கையாளுவதற்கு ரூ.45.05 கோடி செலவில் இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் மேற்கொள்ளப்படும்**

சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தின் ( சேகோசர்வ் ) தற்போது உள்ள நான்கு கிடங்குகளில் ஏற்றி இறக்கும் பணிகளை எளிதாக கையாளுவதற்கு 1.30 இலட்சம் சதுர அடி பரப்பளவில் கன்வேயர், சரக்கு மின்தூக்கி போன்றவற்றைப் பொருத்தி இயந்திரமயமாக்கல் மற்றும் விரிவுபடுத்துதல் பணிகள் ரூ.45.05 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

**11. சேகோசர்வ் நிறுவனத்தின் தற்போதுள்ள கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட ரூ.40 கோடி செலவில் புதிய சேமிப்பு கிடங்கு 1.07 இலட்சம் சதுர அடியில் கட்டப்படும்**

சேலம் கிழங்கு மாவு மற்றும் சவ்வரிசி உற்பத்தியாளர்கள் சேவை தொழிற் கூட்டுறவு சங்கத்தின் (சேகோசர்வ்) தற்போது உள்ள சேமிப்பு கிடங்குகளின் கொள்ளளவை அதிகமாக்கிட சுமார் 1. 07 இலட்சம் சதுர அடியில் புதிய சேமிப்பு கிடங்கு ரூ.40 கோடி செலவில் கட்டுவதற்கு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**12. தாய்கோ வங்கி கிளைகளின் வணிக வலிமையை அதிகரிக்கும் பொருட்டு 5 கிளைகளில் கரோட்டோ மீட்டர் நிறுவுவதற்கும், வாடிக்கையாளர் வசதிக்காக 4 கிளைகளை நவீனமயமாக்கவும், ரூ.82 இலட்சம் செலவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்**

தாய்கோ வங்கியின் வணிக வலிமையை அதிகரிக்கும் பொருட்டு, நகைக்கடன் அதிகம் வழங்கும் 5 கிளைகளில், தங்கத்தின் தரத்தை மதிப்பிட ஏதுவாக 5 கரோட்டோ மீட்டர் உபகரணங்கள் ரூ.35 இலட்சம் செலவில் கொள்முதல் செய்யப்பட்டு நிறுவப்படும். மேலும், வாடிக்கையாளர் வசதிக்காக தாய்கோ வங்கியின் எழும்பூர், வியாசர்பாடி, சேப்பாக்கம் மற்றும் நெய்வேலி கிளைகள் ரூ.47 இலட்சம் செலவில் நவீனமயமாக்கப்படும்.

**13. தொழில்முனைவோருக்கு காலக்கடன் (Term Loan) மற்றும் நடைமுறை மூலதனக்கடன் (Working Capital Loan) தாய்கோ வங்கியிலிருந்து எளிதில் கிடைத்திடும் வகையில், தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்**

தொழில்முனைவோருக்கு காலக்கடன் (Term Loan) மற்றும் நடைமுறை மூலதனக்கடன் (Working Capital Loan) தாய்கோ வங்கியிலிருந்து எளிதில் கிடைத்திடும் வகையில், தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகம் (TIIC) இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் மேற்கொள்ளப்படும்.

தாய்கோ வங்கி மற்றும் தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்திற்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்படுவதால், தாய்கோ வங்கி, தொழில்முனைவோருக்கு அதிக அளவில் கடன் தர இயலும். இதனால் தொழில்முனைவோர் தாய்கோ வங்கியிலிருந்து எளிதாக கடன்பெற்று பயன்பெறுவார்கள்.

**14. தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படை தன்மை விதிகள், 2000-ல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 25 விழுக்காடு வரையிலான கொள்முதல் முன்னுரிமையை கண்காணிக்க, புதிதாக உருவாக்கப்பட உள்ள கொள்முதல் வலைதளத்தில் தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்**

அரசு கொள்முதல் முறைகளில் வெளிப்படைத்தன்மையை மேம்படுத்துவதற்காக தமிழ்நாடு அரசிற்கென, தனி மின்னணு கொள்முதல் வலைதளம் ஒன்று உருவாக்கப்படும் என 2021-22ஆம் ஆண்டிற்கான திருத்த வரவு செலவுத் திட்ட அறிவிப்பினை தொடர்ந்து, இந்த கொள்முதல், வலைத்தளத்தில் தமிழ்நாடு ஒப்பந்த வெளிப்படை தன்மை விதிகள் 2000-ல் குறு மற்றும் சிறு தொழில் நிறுவனங்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 25 விழுக்காடு வரையிலான கொள்முதல் முன்னுரிமையை கண்காணிப்பதற்கு தேவையான வசதிகள் ஏற்படுத்தப்படும்.

**15. மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு பழுதடைந்த பழைய நான்கு சக்கர வாகனங்களுக்குப் பதிலாக ரூ.60 இலட்சம் செலவில் எட்டு புதிய ஈப்புகள் கொள்முதல் செய்யப்படும்**

சென்னை, திண்டுக்கல், கரூர், புதுக்கோட்டை, திருவண்ணாமலை, தேனி, கன்னியாகுமரி மற்றும் நீலகிரி ஆகிய 8 மாவட்டத் தொழில் மைய அலுவலகங்களுக்கு ரூ.60 இலட்சம் செலவில், பழுதடைந்த பழைய நான்கு சக்கர வாகனங்களுக்கு பதிலாக எட்டு புதிய ஈப்புகள் கொள்முதல் செய்து வழங்கப்படும்.

**16. டான்சி நிறுவனத்தில் உற்பத்தி செய்யப்படும் பொருட்களை சந்தைப்படுத்த ஒரு பிரத்யேக காட்சியகம் மற்றும் மின் வணிக இணைய முகப்பு ஆகியன ரூ.3 கோடி செலவில் உருவாக்கப்படும்**

டான்சி நிறுவனம் உற்பத்தி செய்யும் அனைத்து வகையான எஃகு, மர அறைகலன்கள் மற்றும் பிற பொருட்களை சந்தைப்படுத்தி விற்பனை செய்ய, சென்னையில் ஓர் பிரத்யேக காட்சியகம் மற்றும் விற்பனை நிலையம் நிறுவப்படும். மேலும், டான்சி உற்பத்தி செய்யும் அறைகலன்களை விற்பனை செய்வதற்காக நிகழ்நிலை மின் வணிக இணைய முகப்பு (e-commerce online portal) உருவாக்கப்படும்.

**17. ஆர்வமுள்ள அனைத்து தொழில் முனைவோருக்கும் இணைய வழியில் எளிதில் பயிற்சிகள் வழங்குவதற்கு ஏதுவாக EDII நிறுவனத்தின் பயிற்சி திட்டங்கள் ரூ.1கோடி மதிப்பில் இணையமயமாக்கப்படும்**

தொழில்முனைவு, புத்தாக்கம் மற்றும் புத்தொழில் தொடர்பான பயிற்சிகள் மற்றும் ஆதரவு, UYEGP மற்றும் NEEDS திட்ட பயனாளிகளுக்கு அளிக்கப்படும் பயிற்சிகள் முதலியன தங்கு தடையின்றி கிடைத்திட ஏதுவாகவும், தொழில்முனைவு ஆர்வம் கொண்ட பெரும்பான்மையான நபர்களுக்கு தொழில்முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனத்தின் பயிற்சிகள் இணைய வழியில் எளிதில் கிடைக்கப்பெறும் விதமாகவும் ரூ.1 கோடி மதிப்பில் பயிற்சி திட்டங்கள் இணையமயமாக்கப்படும்.

**18. தமிழ்நாட்டிலுள்ள புத்தொழில்களை ஆதரிக்கும் வகையில் தமிழ்நாடு புத்தாக்க ஆதார மானிய (டான்சீட்) திட்டத்தின் மூலம், 50 புத்தொழில்களுக்கு மானியமாக, தலா ரூ.10 இலட்சம் வழங்கப்படும்**

தமிழ்நாட்டில் அதிக அளவில் புத்தாக்கங்களை உருவாக்குவதைக் கருத்தில் கொண்டு, அவற்றின் ஆரம்பகால நிதி தேவைகளான கருத்தாக்கம், ஆராய்ச்சி, முன்மாதிரி வடிவங்களை உருவாக்குதல், சந்தை நுழைவு போன்றவற்றை மேற்கொள்ளும் வகையில் தமிழ்நாடு புத்தாக்க ஆதார மானியத் திட்டத்தின் (டான்சீட்) மூலம், 50 புத்தொழில்களுக்கு, தலா ரூ.10 இலட்சம் மானியமாக வழங்கப்படும்.

**தா.மோ. அன்பரசன்**

**ஊரகத் தொழில் துறை அமைச்சர்**